செ.வெ.எண். 17 நாள்: 07.10.2019

**பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஏரி குளம் குட்டை மற்றும் ஆற்றங்கரை ஆகிய பகுதிகளுக்கு அனுப்ப வேண்டாம்.**

**தற்போது பருவமழை காரணமாக நீர் நிலைகளில் அதிக வெள்ளபெருக்கு மற்றும் ஏரி குளம் குட்டைகளில் மழை நீர் தேங்கியுள்ளதால் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் நீர் நிலைகளில் குளிக்கவோ மற்றும் செல்பி எடுக்கவோ வேண்டாம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் அறிவுரை.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று ( 07.10.2019) நீர் நிலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து செய்தியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

**பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் பொழுது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளதையொட்டி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. ஏரி, குளம், குட்டை மற்றும் தென்பெண்ணையாறு ஆகிய பகுதிகளுக்கு குழந்தைகளை அனுப்பாமல் இருக்க வேண்டும். பெற்றோர்கள் வயல் வெளி மற்றும் வெளியிடங்களுக்கு செல்லும் போது கூட நீர் நிலைகள் உள்ள பகுதிக்கு பாதுகாப்பாக அழைத்து செல்ல வேண்டும். மேலும் குழந்தைகளுக்கு பள்ளி விடுமுறை நாட்களில் அவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளுக்கு குளிக்க செல்லக்கூடாது என அறிவுரை வழங்க வேண்டும்.

கடந்த இரு வாரங்களில் நமது மாவட்டத்தில் 19- குழந்தைகள் மற்றும் நீர் நிலைகளில் விழுந்து இறந்துள்ளனர். இந்த நிகழ்வு கவலைகுரியது. பொதுமக்கள் பெற்றோர்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்து தங்களுடைய குழந்தைகளுக்கும், பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் அறிவுரை கூறி நீர் நீலைகளில் குளிக்க வேண்டாம் என் அறிவுரை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளை கவனமாக பார்த்துக்கொள்வது பெற்றோர்களான நமது கடமை. மேலும் கல்லூரி மாணவர்கள் நீர் நிலைகள் மற்றும் ஆற்றுப்பகுதியில் நின்று செல்பி போன்ற புகைப்படங்கள் எடுக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் யாரும் நீர் நிலைகளில் இறக்காமல் இருக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**மேலும் செய்தியாளர்களின் கேள்விக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பதிலளிக்கு போது:**

ஒவ்வொரு கிராமங்களிலும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் காவல் துறை சார்பாகவும் நீர் நிலைகளில் குளிக்க கூடாது என எச்சரிக்கை பலகை நிருவப்பட்டிருக்கிறது. ஆட்டோக்கள் மூலமாகவும், செய்திதாள்கள் மற்றும் தொலைக்காட்சி வாயிலாகவும், உள்ளூர் தொலைக்காட்சி வாயிலாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கிருஷ்ணகிரி அணை, கெலவரப்பள்ளி அணை, அவதானப்பட்டி பூங்கா அருகே உள்ள ஏரி, போன்ற நீர் நிலைகளில் காவல் துறை மூலமாக கண்காணிப்பை தீவிரப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ,ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.